# திருச்சபை ஒழுங்கு



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையார் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கொரோனா என்னும் கொடிய நோய் நிமித்தமாக சபையாக கூடி வர முடியாதபடி உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிற இத்தடை நமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. சரீர பிரகாரமாக ஒரு இடத்தில் கூடி திருச்சபையாய் தேவனை தொழுது கொள்ள முடியாவிட்டாலும், தேவ ஐக்கியதிற்குள்ளாய், அதாவது அவருக்குள்ளாய் நாம் அனைவரும் என்றைக்கும் ஆவியில் ஒன்றிணைக்கப்பட்டு இருக்கிறோம். எனவே சரீரப் பிரகாரமாய் நாம் பிரிந்து இருந்தாலும் கிறிஸ்துவுக்குள் நாம் ஒரே சிந்தையாய் இணைக்கப்பட்டுள்ளோம்.

இப்படிப்பட்ட இந்த காலத்தில் இதுவரை நாம் கண்டுபிடிக்க இயலாத திருச்சபைக்குள்ளாய் மறைந்திருந்த களைகள் இப்பொழுது வெளிப்பட ஆரம்பித்திருக்கிறது. ஆம் திருச்சபையை பற்றியும், அதை குறித்த நோக்கத்தைப் பற்றியும், அதன் ஒழுங்கை பற்றியும் அறியாத சிலர், இன்று ஆன்லைனில் மற்றும் தொலைக்காட்சியில் சபை நடத்துவதாக கூறி, இதுவே ஆதி காலத்தில் இருந்த சபை முறை என்றும் கூறிவருகின்றனர். இவர்களைப் பொறுத்தவரை, 1 அல்லது 2 பாட்டுப்பாடி, வேதம் வாசித்து, காணிக்கை சேகரித்து, பிரசங்கம் செய்வது மட்டும்தான் சபை ஆராதனை என்று நினைத்து விட்டனர். ஆனால் இப்பொழுது தொலைக்காட்சியில், ஆன்லைனில் செய்யப்படும் ஆராதனை ஒரு தற்காலிக தீர்வே தவிர, அது சபை ஆராதனை அல்லது சபை ஐக்கியம் ஆகாது. உண்மையான தேவ ஊழியர்கள் சபையாக கூடி வர முடியவில்லையே என்று வருத்தத்தோடு ஆன்லைனில் ஆராதனை நடத்துவதை நாம் காண்கிறோம். ஆனால் சத்தியம் அறியாத மற்றவர்களுக்கு ஒரு வித்தியாசமும் இல்லை. ஒரு

குழந்தை தாயின் பாலை உண்டு வளருவதற்கும், பவுடர் பாலை உண்டு வளருவதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தவர்கள், இதையும் உணர்ந்து கொள்வார்கள். ஒருவேளை பால் பவுடரும் ஊட்டச்சத்தான காரியங்களை கொண்டிருந்து, குழந்தையின் பசியைப் போக்கினாலும், என்னாலும் அது தாய் பாலிற்கு ஈடாகாது.

இதில் வேதனை தரும் விஷயம் என்னவென்றால் இப்படிப்பட்ட ஆன்லைன் மற்றும் தொலைக்காட்சி ஆராதனையில் புதுமைகளைப் புகுத்துவதாக எண்ணி சபையின் அடிப்படை ஒழுங்கையே சிலர் கேள்விக்குறியாக்கி விட்டனர். தொலைக்காட்சியில் சபை நடத்தும் போதகர் ஒருவர், தன் கையில் அப்பமும், ரசமும் வைத்துக் கொண்டு, சபை மக்களை நோக்கி நீங்கள் உங்கள் வீட்டில் உள்ள ரொட்டித்துண்டு மற்றும் ஏதாவது ஜூஸ் எடுத்துக் கொண்டு, என்னோடு நற்கருணை ஆராதனையில் இணைந்து கொள்ளுங்கள் என்று கூறுவது வேதத்திலுள்ள நியமத்திற்கு ஏற்றதா என்பது முதலாவது உறுதி செய்யப்பட வேண்டும். ஆனால் அதைப் பற்றி எதுவும் கவலை படாமல் சபை மக்களை வாராவாரம் ஏதாவது ஒரு விதத்தில் எங்கேஜ் பண்ணி, அவர்களை தங்களோடு வைத்துக் கொள்ள இவற்றையெல்லாம் செய்வது வேதனை அளிப்பதாக உள்ளது. ஒருவகையில் திருப்பந்தியில் சேர முடியாதபடி மூன்று மாதங்களுக்கு மேலாக தடை உண்டாயிருந்தாலும் அதற்காக இப்படி செய்வது சரியானது தானா என்பதை திருச்சபைத் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

எனவே எவ்வித ஒழுங்கும் இன்றி இப்படி அவரவர் நினைத்தபடி ஆராதனை நடத்தாமல் திருச்சபைத் தலைவர்கள் கூடி இதற்கும் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தி அதன்படி ஆன்லைனில் மற்றும் தொலைக்காட்சியில் ஆராதனை நடத்த வேண்டும். மேலும் உலகம் முழுவதும் உள்ள திருச்சபைகளில் குறிப்பாக இந்தியா போன்ற ஆசிய திருச்சபைகளில் வெறும் ஒன்று அல்லது இரண்டு சதவிகித ஆலயங்களே இப்படிப்பட்ட ஆராதனையை நடத்துகிறது. ஆனால் மீதமுள்ள 98 சதவிகித மக்கள் இப்படிப்பட்ட ஆராதனை எதுவும் இல்லாவிட்டாலும் நான் முதலில் கூறியப்படி கிறிஸ்துவுக்குள்ளாய் ஐக்கியப்பட்டு, தளர்வுகள் உள்ள இடங்களில் சிறு சிறு குழுக்களாய் ஐக்கியத்தில் உள்ளனர். உண்மையில் வேதத்தை அறிந்து, திருச்சபை ஒழுங்கை அறிந்தவர்கள், இப்படிப்பட்ட காலத்திலும் விசுவாசத்தில் ஸ்திரமாய் இருப்பார்கள். நாம் கவலைப்பட வேண்டியது எல்லாம் புதியதாக வந்தவர்களை பற்றியும், இன்னும் சுவிசேஷம் அறிவிப்பு ஊழியம், சுகம் அளிக்கும் ஊழியம் என்று மக்களை அணுகி செய்யப்பட்டு வந்த ஊழியங்கள் இன்று தடைப்பட்டு இருப்பதையும் கண்டு தான். ஆம் சுதேச ஊழியர்கள் மூலம் சந்திக்கப்பட்டு ஆங்காங்கே உள்ள திருச்சபையில் இணைக்கப்பட்ட புதிய விசுவாசிகளின் நிலையும், இன்னும் தொடர்ந்து சுவிசேஷம்

அறிவிக்கப்பட வேண்டிய மக்களின் நிலையை பற்றியும் தான், நாமும் திருச்சபை தலைவர்களும் அக்கறை செலுத்த வேண்டும். அரசாங்கத்தின் சட்டத்திற்கு உட்பட்டு, ஏதாவது ஒரு வகையில் இப்படிப்பட்ட மக்கள் சந்திக்கபடவேண்டும் இன்டர்நெட் வசதியோ, தனியார் தொலைக்காட்சிகளை காணும் வசதியோ, இல்லாத கோடிக்கணக்கான இப்படிப்பட்ட மக்களை இன்று சுவிசேஷ ஊழியர்களும் திருச்சபை மக்களும் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்திற்குள்ளாய் அவர்களைக் கொண்டு வர வேண்டும். அதற்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும்.

சத்தியமாகிய சுவிசேஷத்தை சொல்லி, ஆங்காங்கே உள்ள நல்ல திருச்சபை ஐக்கியத்தில் மக்களை இணைத்து வந்த நிலை மாறி, தான் சந்திக்கும் அனைத்து மக்களையும் தானாக ஏற்படுத்திய ஒரு தனி ஐக்கியத்திற்குள்ளாய், ஒரே இடத்தில் அவர்களை ஆயிரக்கணக்கில் சேர்த்தவர்களே இப்பொழுது சிரமத்திற்குள்ளாகி உள்ளனர். ஆம் ஒருவேளை கொரோனா ஒழிந்தாலும், ஆயிரக்கணக்கில் கூடி ஒரே இடத்தில் இருப்பது என்பது இன்னும் சில காலத்துக்கு தடை செய்யப்படலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், 50 பேர் அல்லது 100 பேர் ஒரு நல்ல மேய்ப்பனின் கீழ் கூடி ஆராதிக்கும் சபைகள் தங்கு தடையின்றி நடைபெறும். ஆனால் ஆயிரக்கணக்கான மக்களை ஒரே இடத்தில் கூட்டி, சபையின் ஐக்கியம், சபையைப் பற்றிய ஆண்டவரின் நோக்கம் என்பவற்றையெல்லாம் கூறாமல், பெரும் மந்தையாய் கூடியிருக்கும் அவர்களை போஷிக்காமல், சபை ஆராதனையை, கலைநிகழ்ச்சி போல் நடத்துபவர்களுக்கு இனிவரும் காலம் சற்று கடினமாகும். சத்தியத்தை அறிந்தவர்கள், சபை ஐக்கியத்தின் எண்ணிக்கையையோ, சபையின் பிரஸ்தாபத்தை பற்றியோ கவலைப்படாமல் தங்களை நன்கு அறிந்து உணர்ந்த, தங்களுக்கு வேண்டிய ஆவிக்குரிய ஆகாரத்தை தரக்கூடிய சபை ஐக்கியத்தை நோக்கியே செல்வர். அங்கு பெரிய கட்டிடமோ, நவீன உபகரணங்களோ, வசதிகளோ, ஆராதிக்கும் முறைகளோ இல்லாமல் இருந்தாலும், சத்திய வார்த்தைகளும் தேவபிரசன்னமும், ஐக்கியமும் அங்கு இருக்கும்.

மேலும் இதைக் காட்டிலும் மோசமாக உள்ள சில காரியங்களை நாம் காண்பது வேதனை அளிக்கக் கூடியதாக உள்ளது. திருச்சபை ஆராதனையை நடத்துபவர்கள் தேவ ஊழியத்தின் அழைப்பை பெற்று அபிஷேகிக்க பட்ட பின்னரே அவர்களால் போதகராக அல்லது அவருக்கு ஆராதனையில் உதவியாக இருப்பவராக செயல்பட முடியும். சபையின் பாடகர் குழு நடத்தும் நபர் உட்பட இப்படிப்பட்ட ஒழுங்கின் கீழ் செயல்பட வேண்டும். ஆனால் இன்றோ சிலரின் திறமைகளை வெளிக்காட்ட, வளர்த்தெடுக்க சபை ஆராதனை நேரங்கள் பயன்படுத்தப்படுவது வேதனையாகும். சபை போதகர் மனைவியாகவோ அல்லது பிள்ளைகளாக இருந்தாலும் கூட,

அவர்கள் முதலாவது பெண்கள் ஐக்கியம், வாலிபர் ஐக்கியம் போன்றவற்றில் போதிய ஆவிக்குரிய முதிர்ச்சியை பெற்ற பின்னரே சபை ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இன்றோ வாரிசு அரசியல் போன்ற காரியங்கள் திருச்சபைக்குள்ளும் வந்துவிட்டது.

திருச்சபை ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரும், தங்கள் சபையை சேர்ந்தவர்களை, எப்படி தக்கவைத்துக்கொள்வது, காணிக்கை பெறுவது என்று சிந்தியாமல், இக்கொரோனா காலத்திலும், இதற்குப் பின் வரும் காலங்களிலும் எப்படி திருச்சபை மக்களை, திருச்சபை ஐக்கியத்திற்குள்ளாய் வைத்திருப்பது, பெரிய அளவில் கூட முடியாவிட்டால் எப்படி சிறிய அளவில் கூடுவது, மேலும் முடங்கிப் போயிருக்கும் சுவிசேஷ ஊழியத்தை, திருச்சபை மூலம் எப்படித் தாங்குவது, திருச்சபையோடு இணைந்திருக்கும் மருத்துவப்பணி, கல்விப்பணி, மற்றும் சமுதாயப்பணி போன்றவைகளை எவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்து செய்வது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு காரியத்தையே தேவனும் விரும்புகிறார். இதனை எத்தனை பேர் உணர்ந்துகொண்டு உடனடியாக செயல்பட போகின்றனர், செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதை தேவன் அறிவார். அப்படிப்பட்ட மகிமையான, ஒன்றான மெய் திருச்சபையை சேர்த்துக்கொள்ளவே அவர் வருவார். எனவே ஆண்டவர் கொடுத்திருக்கும் இந்த சவாலான பணியை திருச்சபை தலைவர்களும், விசுவாசிகளும் ஒன்றிணைந்து செய்து, அவர் வரும்போது, சகலத்தையும் செய்து முடித்த நிறைவோடு, அவரிடம் சேர்வோமாக. ஆமென், அல்லேலூயா.